**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 580 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 1** |
| **Name** | **:** | திருமதி. ஜெனிபா |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2022**

## முதல் விசாரணை :

நான் தற்போது, அச்சம்பத்து, RV நகரில் குடியிருந்து வருகிறேன். மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் இதழியல் துறையில் துறை பேராசியர் மற்றும் துறை தலைவராக வேலை செய்கிறேன். செப்டம்பர் 26ம் தேதி 2017ம் வருடம், எங்கள் துறையில், ஜுலை 2016 முதல் பிப்ரவரி 2017 வரை Guest Lecturer ஆக தற்காலிகமாக வேலை பார்த்த ஜோதிமுருகன் என்பவர், துறை மாணவிகள் மற்றும் பணியாளர்களிடம் தவறாக நடந்து கொண்டதால், எங்கள் துறையில் முடிவு செய்து, மேற்படி ஜோதிமுருகனை பிப்ரவரி 2017 அன்று அவரை வேலையில் இருந்து நிறுத்திவிட்டோம். அதன் பிறகு ஜோதிமுருகன் எங்கள் பல்கலைகழகத்தில் வேலை பார்ப்பதாகச் சொல்லி, பிப்ரவரி 2017 முதல் ஜுலை 2017 வரையிலான காலத்தில் பொய் சொல்லி கல்யாணம் செய்துள்ளார். அது பற்றி எங்களுக்கு தெரியவந்தது. ஜுலை மாதம் 2017ம் வருட Guest Lecturer பதவிக்கு, பணி நியமனம் செய்யச் சொல்லி, என்னை நேரடியாகவும், வேறு வேறு போன் நம்பரில் இருந்து, இந்த வழக்கு சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு இருந்து என்னை மிரட்டி வந்தார். Untime களிலும், போதையிலும் எனக்கு

போன் செய்து பேசி வந்தார். முந்தைய வாரம் வேறு இரண்டு பேரை நாங்கள் தேர்வு செய்தோம். அதுவரை தினமும் எதிரி வந்து, என்னிடம் வேலை கொடுங்கள் வேலை கொடுங்கள் என்று கேட்டுவந்தார். பல்கலைக்கழகத்தில் உள்ள மற்ற பேராசிரியர்கள் மூலமாகவும் எதிரி ஜோதிமுருகனுக்கு வேலை கொடுக்கச் சொல்லி எனக்கு அழுத்தம் கொடுத்து வந்தார். இடைப்பட்ட நாட்களில் ஜோதிமுருகன் அவரது அம்மாவுடன் எனது வீட்டிற்கு வந்தும் என்னை மிரட்டி சென்றார். சம்பவ தினத்திற்கு முந்தைய வாரமும், முந்தைய நாளும் எனது அலுவலகத்திற்கு ஆஜர் எதிரி வந்து, தன்னுடைய மனைவிக்கு தான் இந்த பல்கலைகழகத்தில் வேலை செய்யவில்லை என்று தெரியவந்ததால் என்னை விவாகரத்து செய்ய போகிறார் என்றும், அதனால் எனக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றும் சில நாட்கள் கெஞ்சியும், சில நாட்கள் மிரட்டியும், போதை போட்டுவந்து, என்னை மிரட்டி வந்தார். கடந்த 26.09.2017 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் ஆஜர் எதிரி எனது அலுவலக அறைக்கு வந்து, திரும்ப வேலை வேண்டும் என்று என்னிடம் கேட்டார். நான் துறையின் கவுன்சிலில் முடிவு செய்யப்பட்டது. உங்களுக்கு மீண்டும் இங்கு வேலை இல்லை என்று சொன்னேன். நான் சொன்ன பிறகு, எனது அறைக்கு வெளியில் ஆஜர் எதிரி காத்திருந்தது எனக்குத் தெரியாது. அன்றைய தினம் காலை சுமார் 10.20, 10.30 மணி இருக்கும், என்னுடைய அறையில் இருந்த அட்டன்டர் சீதாலெட்சுமி, ஆஜர் எதிரி வெளியில் சென்றதை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, உள்ளே வந்து என்னிடம் சீட்டிற்கு பக்கத்தில் வந்த பிறகு ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, எனக்கு வேலைகொடுக்காத நீ உயிரோடு இருக்க கூடாது என்று சொல்லி எனது வலது பக்க தோள்பட்டையில் இருந்து குத்த ஆரம்பித்து, வரிசையாக, தோள்பட்டை, கழுத்து மற்றும் 22 இடங்களில் குத்திவிட்டார். நான் அலறல் சத்தம் போட்டு, கதவு கிட்ட போகும் வரை, எனது கை, தோள்பட்டை, மார்பு, முதுகு ஆகிய பகுதியில் குத்திக்கொண்டே இருந்தார். நான் கதவு கிட்ட போக இயலாமல் தவழ்ந்து தலையை அசைத்துக்கொண்டே சென்று கொண்டிருந்த போதும், ஆஜர் எதிரி என்னை தொடர்ந்து குத்திக்கொண்டே இருந்தார்.

முதுகில் மீண்டும் ஆழமாக குத்திவிட்டார். அப்போது நான் கீழே விழுந்துவிட்டேன். எனது சத்தம் கேட்டு மாணவர்கள் ஓடிவந்தார்கள். எங்கள் துறையின் அறை 2 வது மாடியில் உள்ளது. முதல் தளத்தில் தமிழ் துறையின் அறைகள் உள்ளது. நாங்கள் 1 வது தளத்தில் இருந்தோம். எனது சத்தம் கேட்டு தமிழ்துறை மாணவர், அழகுராஜா, சரத்குமார் மற்றும் Phd மாணவர் கருப்பசாமி ஆகியோர் ஓடிவந்தார்கள். இதழியியல் துறை மாணவர் நவீன், மீர்கலிம்ஷா, சுஜி, அழகுலெட்சுமி, சரவணன், மதுமிதா, மற்றும் சில மாணவர்கள் ஓடிவந்தார்கள். எனக்கு கையில் நரம்பு கட் ஆனதாலும், நான் இரத்த வெள்ளத்தில் கிடந்தேன். சம்பவ தினத்தில் பல்கலைகழகத்தில் Job Fair நடந்து கொண்டிருந்தது. நிறைய மாணவர்கள் அதில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள். மாவட்ட ஆட்சித்தலைவரும் அங்கு வர இருந்ததால் அங்கு 108 ஆம்புலன்ஸ் தயாராக இருந்ததால், 2 வது மாடியில் இருந்து என்னை மாணவர்கள் ஆம்புலன்சில் தூக்கிச்சென்று எனக்கு நாகமாலைபுதுக்கோட்டையில் உள்ள ஆரம்ப சுகாதாரநிலையத்தில் வைத்து எனக்கு முதலுதவி அளித்து தையல் போட்டார்கள். எனக்கு மார்பு, கழுத்து, கையில் தையல் போடப்பட்டது. பிறகு வடமலையான் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அதே ஆம்புலன்சில் தூக்கிச் சென்றார்கள். எனக்கு காயத்தினால் நிறைய இரத்தம் இழந்ததால் 5 யூனிட் இரத்தம் ஏற்றினார்கள். மொத்தம் 22 இடத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு சுமார் 75 தையல்கள் போட்டார்கள். 2 மணி நேரம் சிகிச்சை அளித்தார்கள். பின்னர் எனக்கு உள் காயங்கள் இருப்பதற்காக MRI ஸ்கேன் பரிசோதனை செய்தார்கள். 15 நாட்கள் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். இடது கையை என்னால் தூக்க இயலவில்லை. இது ஒரு பெரிய டிராமா என்பதால் எனக்கு Panic Attack வந்ததது. எனக்கு மனநலமருத்துவர் செல்வமணி வந்து எனக்கு சிகிச்சை அளித்தார். அதற்கு பிறகும் நான் சம்பவத்தை பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு நெஞ்சு படபடப்பு, தலை சுற்றல் மற்றும் மயக்கம் வரும். சம்பவம் நடந்து 3 மாதங்கள் கழித்தும் என்னால் இடது கையை தூக்க இயலவில்லை. எதற்காக என்று எங்களால் கண்டுபிடிக்க இயலவில்லை. 4,5

நரம்பியல் நிபுணர்களிடம் நான் இது குறித்து சிகிச்சை பெற்றும், கலந்தாய்வு செய்தேன். அதற்கு பிறகு Nerve Contention Test செய்த போதுதான் எனக்கு கழுத்தில் இருந்து கைக்கு செல்லும் நரம்பு துண்டிக்கப்பட்டது பற்றி டிசம்பர் மாதம் 2017 அன்று தான் தெரியவந்தது. இன்று வரை என்னால் இடது கையால் கொஞ்ச வெயிட் உள்ள பொருட்களை மட்டும் தான் தூக்க முடியும். 22.12.2017 ம் தேதி எனக்கு நரம்பு துண்டிக்கப்பட்டதற்காக ஒரு மேஜர் அறுவைசிகிச்சை கோயம்புத்தூர், கங்கா மருத்துவமனையில் செய்தார்கள். எனக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்பதால் வேலூர் CMC மருத்துவமனையிலும், சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையிலும் consult செய்தோம். அதன் பிறகு 5 மாதகாலமாக பிசியோ தெரபி செய்து தான் எனக்கு இடது கை தூக்க முடிந்தது. (சாட்சி மேற்படி சிகிச்சை முறைகளுக்கான அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்). இன்று வரை எனக்கு இடது கை வலி உள்ளது. நான் வடமலையான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது, போலிசார் வந்தார்கள். அவர்களிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் **புகார் அதசாஆ. 1 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் கத்திதான் ஆஜர் எதிரி என்னை குத்த பயன்படுத்திய கத்தியாகும். அது **அசாபொ.1 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் சிமெண்ட் சிலாப் சம்பவ இடத்தில் இருந்ததாகும். அவைகள் **அசாபொ.2,3 ஆகும்.** அதில் ஒன்று இரத்தக்கரை படிந்தது ஆகும். என்னிடம் காட்டப்படும், மயில் புளு கலர், சிவப்பு பாடர் போட்ட சேலை ஒன்றும், பிளௌஸ், சந்தனகலர் பிரா, புளு கலர் பாவாடை ஆகியவைகள் சம்பவ சமயத்தில் நான் அணிந்திருந்தவைகள் ஆகும். அவைகள் **அசாபொ.4 முதல் 7 ஆகும்.** அவைகள் அனைத்திலும் இரத்தக்கரை படிந்துள்ளது. என்னிடம் காட்டப்படும் சட்டைதான் ஆஜர் எதிரி சம்பவ சமயத்தில் அணிந்திருந்தது ஆகும். **அந்த சட்டை அசாபொ.8 ஆகும்.** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரி தரப்பில் பிரிவு 231(2) குவிமுச-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. எதிரி தரப்பில் ஆஜரான இளம் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று தெரிவித்ததால் சாட்சியம் முடிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 580 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | **திரு. மீர்கலிம்ஷா** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது RR நகர், திருப்பாலையில் குடியிருந்து வருகிறேன். தற்போது NEWS TAMIL சேனலில் Sub Editor ஆக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எங்கள் காமராஜர் பல்கலைகக்கழக்த்தில் Guest Lecturer ஆக வேலை பார்த்தார். அசா1 ஜெனிபா எங்கள் இதழியியல் துறை தலைவராக இருந்தார். கடந்த 26.09.2017 ம் தேதி எங்கள் துறை தலைவரின் அலறல் சத்தம் கேட்டு நாங்கள் ஓடிச்சென்று பார்த்தோம். எங்கள் துறை தலைவர் அலறல் சத்தம் கேட்டு நாங்கள் ஓடி சென்று பார்த்த போது ஆஜர் எதிரி அவரை கத்தியால், முதுகு, கை, நெஞ்சு, ஆகிய இடங்களில் குத்திக்கொண்டு இருந்தார். எங்களை பார்த்தவுடன் ஆஜர் எதிரி ஓடப்பார்த்தார். ஆனால் அங்கிருந்த மாணவர்கள் ஆஜர் எதிரியைப் பிடித்துவிட்டார்கள். போலிசில் ஒப்படைத்தார்கள். ஆஜர் எதிரி எங்கள் பல்கலைகழகத்தில் வேலைபார்த்த போது, மாணவிகள் மற்றும் அங்கு வேலை செய்தவர்களிடம் illegal activity யில் ஈடுபட்டதால் ஆஜர் எதிரியை அசா1 பணியில் இருந்து தூக்கிவிட்டார். அதற்கு பிறகு அசா1 இடம் ஆஜர் எதிரி வேலை வேண்டும் என்று பலமுறை டார்ச்சர் செய்துகொண்டிருந்தார்.

ஆனால் ஆஜர் எதிரி தவறாக நடந்துகொண்டதால் அசா1.ஜெனிபா மேடம் வேலை போட்டுத்தரவில்லை. சம்பவ தினத்தில் எங்கள் பல்கலைகழகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றதால் அங்கு நிறைய மாணவர்கள் வந்திருந்தார்கள். அங்கு இருந்த 108 ஆம்புலன்சில் எங்கள் துறைதலைவரை ஏற்றிக்கொண்டு நாகமலைபுதுக்கோட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, மீண்டும் அதே ஆம்புலன்சில் அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை வடமலையான் மருத்துவமனையில் சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரி தரப்பில் பிரிவு 231(2) குவிமுச-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. எதிரி தரப்பில் ஆஜரான இளம் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று தெரிவித்ததால் சாட்சியம் முடிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 580 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | **திரு. நவீன்** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திண்டுக்கலில் குடியிருந்து வருகிறேன். ஹைதராபாத்தில், content writer ஆக வேலை செய்கிறேன். அசா1.ஜெனிபாவைத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரி எங்கள் காமராஜர் பல்கலைகழகத்தில் guest lecturer ஆக வேலை பார்த்தார். கடந்த 26.09.2017 ம் தேதி நாங்கள் எங்கள் class Room ல் இருந்த போது, அசா1 வந்து attendance எடுத்துவிட்டு சென்றுவிட்டார். சிறிது நேரத்தில் அசா1 ன் அலறல் சத்தம் கேட்டது. மாணவர்கள் அனைவரும் சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்த்தபோது, ஆஜர் எதிரி அசா1 ஐ கத்தியால் குத்திக்கொண்டிருந்தார். எங்களைப் பார்த்தவுடன் ஆஜர் எதிரி ஓடிப் போகப் பார்த்தவரை மாணவர்கள் அனைவரும் சேர்ந்து பிடித்துவிட்டார்கள். ஆஜர் எதிரி எங்கள் பல்கலைகழகத்தில் வேலைபார்த்த போது, மாணவிகள் மற்றும் அங்கு வேலை செய்தவர்களிடம் illegal activity யில் ஈடுபட்டதால் ஆஜர் எதிரியை அசா1 பணியில் இருந்து தூக்கிவிட்டார். அதற்கு பிறகு அசா1 இடம் ஆஜர் எதிரி வேலை வேண்டும் என்று பலமுறை டார்ச்சர் செய்துகொண்டிருந்தார். ஆனால் ஆஜர் எதிரி தவறாக நடந்துகொண்டதால்

அசா1.ஜெனிபா மேடம் வேலை போட்டுத்தரவில்லை. இதனால் அவருக்கு கோபம் ஏற்பட்டு அசா1 ஜெனிபா மேடமை ஆஜர் எதிரி கழுத்து, மார்பு, கை, முதுகு ஆகிய இடங்களில் குத்தினார். நாங்கள் பார்த்த போது ஆஜர் எதிரி மேடம் முதுகு, கழுத்து ஆகிய பகுதிகளில் குத்திக்கொண்டு இருந்தார். மற்ற மாணவர்கள் ஆஜர் எதிரியை கூட்டிக் கொண்டு கீழே சென்றார்கள். நாங்கள் சில மாணவர்கள் சேர்ந்து, இரத்தம் வழிந்தபடி இருந்த அசா1 ஜெனிபா மேடத்தை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாகமலைபுதுக்கோட்டை மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்கு அழைத்துச் சென்று பின்னர் வடமலையான் மருத்துவமனையில் சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரி தரப்பில் பிரிவு 231(2) குவிமுச-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. எதிரி தரப்பில் ஆஜரான இளம் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று தெரிவித்தததால் சாட்சியம் முடிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை